தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ருச	திருவள்ளுவர் யாண்டு உ௰கக இரௌத்திரி ஆனி 1980 ஜூன் - ஜூலை	மலர் ந

ஆய்தம் என்னும் முப்பாற்புள்ளி

பேராசிரியர் ச, பாலசுந்தரம்,

(துணர் 54. மலர் 2 பக்கம் 39/ 46ன் தொடர்ச்சி)

இனி, 'ஈரியல் மருங்கினும் இசைமை தோன்றும்' எனக் கூருதுவிடின்

''அற்ருல் அளவறிந் துண்க வஃதுடம்பு
பெற்ரு னெடிதுய்க்கு மாறு'' - (குறள்)

எனவரும் வெண்பாக்கள் ஆசிரியத் தளைதட்டுக் குற்றமாய் முடியும் 'என்க. இவ்வெண்பாவினுள் நிற்கும் ''உண்க' என்னும் சொல்லை உண்ணுக' எனத்திருத்திக் கொள்ள வேண்டும் கொள்ளின் தளை கெடாது என்பாரும் உளர், அவர்தாம் ஆய்தத்தை ஒற்றெழுத்தாகக் கருதுவர் ஆய்தம் ஒற்றெழுத்தாயின் ஆசிரியர் சார்பெழுத் தென்று ஓதியது எற்றுக்கு? அன்றியும்,

அற்ருர் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்ருன் பொருள் வைப் புழி. [குறள்-226]

வேண்டாமை யன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்ப தில். [குறள்-363]

கற்றில ணாயினுங் கேட்க அஃதொருவற்
கொற்கத்தின் ஊற்ருந் துணை [குறள்-414]

இன்பங் கடல் மற்றுக் காமம் அஃதடுங்கால்
துன்பம் அதனிற் பெரிது [குறள்-1166]

எனவருங் குறட்பாக்களை எவ்வாறு திருத்துவது?

எனவே, இவற்றுள்வரும் ஆய்தம் உயிரியல் மருங்காக நின்று குற்றெழுத்தைப் போல அலகுபெற்றும்

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் ரேன்ருமை நன்று என்ருற்போல

வருவனவற்றுள் ஆய்தம்ஒற்றியல்மருங்காக நின்று மெய்யெழுத்தைப் போல அலகுபெருதும் வரும் என்பதை உணர்த்தவே,

"ஈரியல் மருங்கினும் இசைமை தோன்றும்" என -ஆசிரியர் தெளிவு படுத்தினர் என்க.

-இனி இறுதியாக

"உருவினும் இசையினும் அருகித் தோன்றும்

மொழிக்குறிப் பெல்லாம் எழுத்தி னியலா

ஆய்தம் அஃகாக் காலை யான" என்னும் நூற்பாவான்

ஆய்தம் தனக்குரிய அரை மாத்திரையினும் ஒரோவிடத்து மிக்கு ஒலிக்கும் என்றும், அவ்வாறு ஒலிக்கும் இடம் இவை என்றும் கூறுவதோடு இவ்வெழுத்தின் தன்மையையும் ஆசிரியர் மிக நுட்பமாகப் புலப்படுத்துகின்றார்.

இனி முதலெழுத்துக்களுள் நாதஒலியாகத் தாமேதோன்றி உயிர்த்தலானும் மெய்யினை ஊர்ந்து அவற்றை இயக்குதலானும் அகர முதலியவற்றிற்கு உயிர் என்றும், ஒற்றிய அளவில் நின்று உயிரைச் சார்ந்தும் உயிரை மேவியும் பிறந்து வெளிப்படுத்தலான் ககர முதலியவற்றை 'மெய்' என்றும் வழங்கும் பெயர்க் காரணம் நன்கு புலப்படுதலின் ஆசிரியர் அவற்றை விளக்கவில்லை அவ்வாறே சார்ந்து வருதலின் குற்றியலிகரம் முதலிய மூன்றற்கும் சார்பெழுத் தென்றதன் காரணம் ஓரளவு புலப்படுமாயினும் அவை ஒவ்வொன்றும் எவ்வெவற்றின் கூறுகளென விதந்து கூறினரில்லை, என்னை காரணமெனின் குற்றியலிகரமும் குற்றியலுகரமும் அரைமாத்திரை அளவினவாய் ஒருமொழியைச் சார்ந்து வரும் இயல்பினவாயினும் அகர ஆகாரங்கள் வெவ்வேறு [ஒலியன்கள்] எழுத்துக்களாயினும் இரண்டும் ஓரினமேயாய் விளங்குதல் போல, இக்குற்றியலிகரமும் குற்றியலுகரமும் மாத்திரையானும் புணர்ச்சி வகையானும் வேறு [ஒலியன்] எழுத்தாக எண்ணப்படினும் அவை உயிரினத்தைச் சார்ந்தனவே என்பதும் உயிரினத்தில் உள்ள இகர உகரங்களின் இனமே என்பதும் ஒலிவடிவில் அவற்றை ஒத்தும்வரி வடிவில் புள்ளி பெற்றும் நிற்கும் என்பதும் உய்த்துணரப் படுதலின் என்க. அம் முறையான் இவ்வாய்தம் உயிரைச் சார்ந்ததா, மெய்யைச் சார்ந்ததா என நிகழும் ஐயத்தைப்போக்கி இதன் தன்மையை இந்நூற்பாவான் தெற்றெனப் புலப் படுத்துகின்றார் ஆசிரியர்.

ஒருசாரார் இவ்வாய்தத்திற்குரிய அஃகேனம் புள்ளி, தனிநிலை, ஒற்று என்னும்இதன் பிறபெயர்களுள் ஒற்று, புள்ளி என்பவற்றை இஃது மெய்யெழுத்தைச் சார்ந்ததே என்பர். ஈண்டுப்

புள்ளி-ஒற்று என்னும் பெயர்கள் அதன் வரிவடிவத்தைச் சுட்டுதலின் அதுகொண்டு இதனை மெய்யெனக் கூறுதல் பொருந்தாதாம் ஏனெனின் உயிரினத்துள் எகர ஒகரமும் புள்ளிபெறுதலின் அவற்றையும் ஒற்றெனக்கூறவேண்டி வரும். அன்றி உயிரைச் சார்ந்ததெனக் கூறின் இஃது ஏனைய குற்றியலிகரம் குற்றியலுகரம் போன்று மெய்யின்கண்ஏறி அவற்றை இயக்குதல் வேண்டும்- மெய்யைச்சார்ந்தது எனக்கருதின் உயிரேற இடங் கொடுத்தல் வேண்டும். மேலும் ஏனைய எழுத்துக்களைப்போல ஏற்றபெற்றிமொழி முதலிலும் ஈற்றிலும் வருவதில்லை இருசிறகெழுப்ப எழும் உடல் போல ஒருமொழியின் இடையே மட்டும் வருகிறது. எனவே இதனை முழுமையாக எழுத்தென்று கொள்ளவும் இயலவில்லை என் - செய்வது? இவ்விடர்ப்பாட்டை ஓர்ந்த ஒல்காப்புலமைத் தொல்காப் பியனார் நூன்மரபு இரண்டாம் நூற்பாவில் ''எழுத்தோரன்ன'' என மூன்றற்கும் பொதுவாகக்கூறி இந்நூற்பாவில் அதன் தன்மை முழுதும் விளங்க ''எழுத்தின் இயலா ஆய்தம்'' என்று தெளிவு படுத்தினர்.

அஃதாவது ஆய்தம் ஓர் எழுத்தாக எண்ணப் படினும் ஏனைய முதல் சார்பெழுத்துக்களைப்போல நடவாது இதுதனித்தன்மை உடையது என்று விளம்புகின்றர், மூன்னர் முப்பாற்புள்ளி என இதன் வரிவடிவைப்புலப் படுத்திய வித்தகத்தின் அதிவித்தகம் வாய்ந்தது 'எழுத்தினியலா ஆய்தம்' என்னும் விளக்கம் என்க,

இந்நூற்பாவின் நேரிய பொருளை உணரமாட்டாமல் உரையாளர் ஒவ்வொருவரும் தத்தமக்குத் தோற்றியவாறெல்லாம் பொருள்கூறி ஆசிரியரை 'மயங்கவைத்தல்' என்னும் குற்றமுற நூல்செய்தாராக மறைமுகமாகக் குறைவுபடுத்தியுள்ளனர். இனி அதன் செம்பொருளைக் காண்போம்,

உருவினும் இசையினும் அருகித் தோன்றும்
மொழிக்குறிப் பெலலாம் எழுத்தின் இயலா
ஆய்தம் அஃகாக் காலை யான [நூ-40]

பொருள் :—

எழுத்தின் இயலா ஆய்தம் = ஏனைஎழுத்துக்களைப் போல நடவாத [தனித்தன்மையுடைய] ஆய்தஎழுத்து. அஃகாக்காலையான = தனக் குரிய அரைமாத்திரையளவாய்ச் சுருங்கிநில்லாமல் [சிறிது] நீண்டு ஒலிக்குங்கால், உருவினும் இசையினும் = நிறம்பற்றியும் ஓசை பற்றியும் வரும் சொல்லகத்து, அருகித்தோன்றும் = சிறுபான்மை யாகத் தோன்றும் [மொழிக்குறிப்பெலலாம்]. எல்லாம் குறிப்பு மொழி= அவையெல்லாம் குறிப்பு மொழிகளாம்,

எடுத்துக்காட்டு :– 'கஃஃறென்னும் கல்லதாத்தம்'
'சுஃஃறென்னும் தண்டோட்டுப் பெண்ணை'
கஃறு என்பது உரு. சுஃறு என்பது இசை.

இவ்வாறு வழக்கினத்தும் வெள்ளை வெளேர், பச்சைப் பசேல், கன்னங் கறேர் என நிறம் பற்றியும் நீரை நெருப்புச்'சுர்' என உறிஞ்சி விட்டது என ஓசைபற்றியும் குறிப்பு மொழிகள் வழங்கக் காணலாம், இவற்றுள் கறேர் என்பதும் சுர் என்பதும் முறையே கஃறு - சுஃறு என்பவற்றின் சிதைவுகளாகும்.

விளக்கவுரை:= 'அவை' யெல்லாம் எனச் சுட்டு அவாய்நிலையான் வருவிக்கப்பட்டது. 'குறிப்புமொழி என்பது பெயர்ப் பயனிலை. 'எழுத்தினியலா' என்னும் அடையடுத்த எதிர்மறைப் பெயரெச்சம் ஆய்தம் என்பதற்கு இனஞ்சுட்டாத அடை [இவ்அடையான் ஆய்தத்தின் இயல்பு விளக்கப் பட்டது] இவ்வாறு இலக்கணக் குறியீட்டுச் சொற்களை இன்றியமையாத போது விதந்து விளக்குதல் இவ்வாசிரியர் இயல்பு. இதனை,

பல்லவை நுதலிய அகர இறுபெயர்	[நூ-174]
ஏவல் கண்ணிய வியங்கோட் கிளவி	[நூ-216]
நெறிப்பட வாராக் குறைச்சொற்கிளவி	[நூ-250]
பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்	
ஆண்மை சுட்டிய பெயர்நிலைக் கிளவி	[நூ-487]
ஒன்றுவினை மருங்கின் ஒன்றித் தோன்றும்	
வினைவேறுபடாப் பலபொரு ளொருசொல்	[நூ-537]
மகடூஉ மருங்கின் பால்திரி கிளவி	[நூ-679]
ஈரளபிசைக்கும் இறுதியிலுயிர்	[நூ-756]
அன்பொடு புணர்ந்த ஐந்திணை	[நூ-1038]
அன்புதலை யடுத்த வன்புறை	[நூ-1060]
ஏது நுதலிய முதுமொழி	(நூ1433)
மறைமொழி கிளந்த மந்திரம	[,,]
ஆற்றலொடு புணர்ந்த ஆண்பால்	(நூ-1549)
மறுதலைக் கடாஅ	(நூ-1604)
முந்துமொழிந்ததன் தலைதடுமாற்றம்	(நூ-1610)

என்றாற் போல வருவன வற்றால் உணரலாம்.
மேலும் விரவுப்பெயரென வாளாகூறாது ''அஃறிணை விரவுப்பெயர்' என ஆசிரியர் கூறியவிடத்து நச்சினார்க்கினியர் கூறும் விளக்கத்தானும், 'அடக்கியல் வாரம்' என்னுமிடத்துப் பேராசிரியர் கூறும் விளக்கத்தானும் கருதியது முடித்தற் பொருட்டு ஆசிரியர் சிலவற்றை விதந்து கூறுவார் என்பதை அவ்வுரையாளர்கண் டுணர்ந்து விளக்கியுள்ளமையால் அறியலாம்.

வெண்மை, பொன்மை முதலாய உருவுபற்றிய சொற்-களையும், இரைத்தல், கனைத்தல் -முரித்தல் முதலாய இசை பற்றிய சொற்களையும் நீக்குதற்பொருட்டு வாளா 'மொழி' என்னாது 'மொழிக் குறிப்பு' என ஆசிரியர் விதந்துள்ளார் என்க. இக்குறிப்பு மனத்தா-னன்றிப் பொறிகளான் உணரப்படாதென்க.

ஆய்தம் அருகித் தோன்றும் என்றும் [அவை] எல்லாம் குறிப்புமொழிக[ளாம்] என்றும் தனித்தனி கூட்டி, ஆய்தம் குறிப்பு-மொழிகளில் அருகித் தோன்றும் என வினைமுடிவு செய்க.

இந்நூற்பாவால் ஆய்தத்தின் ஒருசார் இலக்கணத்தைப் புலப்படுத்துவதோடு அஃதுதன் அரைமாத்திரையினும் ஒரோவழி மிக்கிசைக்கும் என்றும், மிக்கிசைக்குமிடம் இவையெனறும் விதித்தல் இதன் பயனும். ஏனையஇரண்டு சார்பெழுத்துக்களும் தமக்குரிய அரைமாத்திரையினும் ஒரோவிடங்களில் குறைந்தொலிக்கும் இது மிக்கொலிக்கும் இவையே இவற்றுள் வேறுபாடென்க.

மற்று இந்நூற்பா இருபொருள் விரிப்பதாக (வாக்கிய பேதம்) ஆகுமோஎனின் ஆகாது என்னை 'உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே' என்னும் நூற்பா எவ்வாறு ஒருபொருள்கருதியதாக அமைந்ததோ அவ்வாறே இந்நூற்பாவும் அமைந்துள்ளது என்க.

இனி இந்நூற்பாவிற்கு உரையாளர் கண்ட பொருளையும் அவற்றின் ஏலாமையையும் சிறிது காண்போம்,

இளம்பூரணர் உரை:— 'ஒருபொருளினது உருவத்தின் கண்ணும் ஓசையின் கண்ணும் சிறுபான்மையாகத் தோன்றும் குறிப்பு மொழிகளெல்லாம் ஆய்த எழுத்தானிட்டு எழுதப்பட்டு எழுத்துப்போல நடவா அஃது எக்காலத்துமோ எனின். அன்று அவ்வாய்தம் தன் அரைமாத்திரையளவாய்ச் சுருங்கிநில்லாது அவ் வுருவும், இசையது மிகுதியும் உணர்த்தற்கு நீண்டகாலத்து அந்நீட்சிக்கு''
எனப்பொருள் உரைத்துக்' கஃறு — சுஃறு எனஎடுத்துக் காட்டும் தந்துள்ளசர்

இவ்வுரையுள் 'ஆய்த எழுத்தானிட்டு எழுதப்பட்டு நடவா' என்னும் தொடரின் கருத்துத் தெளிவுபடவில்லை. எனினும் இதன் கருத்து ஆய்தம் இரண்டு இட்டு எழுதப்படாது என்பது உரையாசிரியர் கருத்தென்பதை நச்சினர்க்கினியர் இவரைமறுத்து இந்நூற்பாவிற்கு உரைகூறுமிடத்து எழுதும் உரைப்பகுதியான் தெரிகின்-றது. அஃதாவது கஃறு சுஃறு எனநிறத்தையும் இசையையும் உணர்த்திவரும் குறிப்புமொழிகளில் உள்ள ஆய்தம். கூறுவோன்

நிலையில் நீண்டிசைப்பினும் அவை அளபெடை ஆகாமையின் இரண்டு எழுத்திட்டு எழுதப்படாதென்பது இளம்பூரணர் கருத்தெனத் தெரிகிறது. அஃதாவது ஆய்தம் அளபெடையாக வாராது என்பது அவர் கருத்து இதனுல் ஆய்த அளபெடை உரையாசிரியர்க்கு உடன்பாடில்லை எனக் கொள்ளவியலாது. என்னையெனின் செய்யுளியல் இரண்டாம் நூற்பா உறையுள் மெய்யினுட் சிலவும், ஆய்தமும் அளபெடுக்கும் எனக்கூறி,

எஃஃகிலங்கிய கையராய் இன்னுயிர்
வெஃஃகுவார்க்கில்லை வீடு

என எடுத்துக்காட்டுந் தந்துள்ளமையின் என்க. ஒருகால் செய்யுளில் மட்டும் அளபெடையாக வரும் என்பதும் அவர் கருத்தாகவும் இருக்கலாம். அன்றிக் குறிப்புமொழியல்லாத பெயர்ச்சொற்களிலும் வினைச்சொற்களிலும் அளபெடையாக வரலாம் என்பதும் அவர்கருத்தாகலாம். எவ்வாறிருப்பினும் இந்நூற்பாவிற்கு இவ்வுரை பொருந்தாதென்பதை நச்சினர்க்கினியர் இதனை விலக்கி வேறுரை கூறுவதனுல் அறியலாம். அடுத்து

நச்சினர்க்கினியர் உரை:— நிறத்தின் கண்ணும் ஓசையின் கண்ணும் சிறுபான்மை ஆய்த ந் தோன்றும் பொருள்குறித்தலை உடைய சொல்லும் அவை ஒழிந்த எல்லாமொழிகளும், ஒற்றெழுத்துக்கள் போல அரைமாத்திரையின் கண்ணும் சிறுபான்மை மிக்கு நடந்து ஆய்தம் சுருங்காத இடத்தான சொற்களாம்.
என்றுபொருள் கூறிக்

கஃஃறென்னும் கல்லதரத்தம்
சுஃஃறென்னும் தண்டோட்டுப் பெண்ணை
எஃஃகிலங்கிய கையராய். . , ... வீடு என

எடுத்துக்காட்டுக்களும் தந்துள்ளார். இவர் 'இன்' என்பதனை 'செய்யா' என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சமாகவும் 'காலை' என்பதனைக் குறிப்பு வினைப்பெயராகவும் கொண்டு பொருள் கண்டுள்ளார்

இவர் உரையும் பொருத்தாதென்பதை வேங்கடாராசுலு ரெட்டியார் பொருத்தமாக மறுத்துள்ளமை அவர் உரையால் தெரியலாம். அன்றியும் ஆசிரியர் கருத்து இவ்வாறிருப்பின் அவர் இத்துணை மயக்கமாக சூத்திரஞ் செய்திரார். நச்சர் இவ்வாறு வலிந்தும் நலிந்தும் பொருள் கூறுதற்குக் காரணம், செய்யுளியலை நோக்கி எனக்கருதலாம் அஃதாவது சில ஒற்றெழுத்துக்களைப் போல ஆய்த எழுத்தும் அளபெடுத்துவரும் என்பதற்கு இந்நூற்பாவை விதியாக்கும் முயற்சியே எனலாம்.

தொடரும்

ஆராய்ச்சி அறிஞர் திரு. மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் மறைவு

— சிலுவை மோகனசுந்தரன் —

செந்தமிழ் நாட்டின் சீர்மிகு 'ஆராய்ச்சி அறிஞர்' திரு மயிலை. சீனி வேங்கடசாமி அவர்கள் 8 - 5 - 80 இல் இயற்கை எய்தினார்கள். அறிஞர்கள் பலர் 9 - 5 - 80 இல் புகழ் அஞ்சலி செலுத்தினர்கள். ஆராய்ச்சி உலகில் ஒரு பறவையாய் இருந்து பல்வேறு இடங்களுக்குப் பறந்து சென்று அவர்கள் கண்ட ஆய்வுப் பொருள்களை எல்லாம் தமிழ்ச் சமுதாயத்திற்கு நிலையான பொற்குவியலாய்ச் சேர்த்து வைத்து மறைந்தார்கள்.

அப்பறவையைப் பற்றி,

'அவர் சீர்திருத்தக்காரர், ஆராய்ச்சியாளர், காய்தல் உவத்தல் அகற்றி எதையும் நோக்குவார். இவை உண்மை வேட்டலுக்கு உரிய பண்புகள் என்று சொல்லவும் வேண்டுமோ?

'இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம்' முன்னுரையில் திரு. வி.க.

'தாம் கற்றதையும் உணர்ந்ததையும் உலகிற்கு அறிவித்து மகிழும் இலக்கிய ஆராய்ச்சியாளர் சிலரைத்தான் பெற்றிருக்கிறோம். நாம் பெற்றுள்ள ஆராய்ச்சியாளருள் மயிலை சீனி வேங்கடசாமி குறிப்பிடத்தக்கவராவர்'

-திரு.சி.சுப்பிரமணியம், கல்வி-நிதி அமைச்சர்
மயிலை சீனி மணிவிழா மலர் 17 - 1 - 61

'இப்பெரியார் தமிழ்ப் பேரின்பத்திற்காகச் சிற்றின்பத்தை அறவே துறந்து, நன்னெறியில் ஒழுகி மாந்தர் பலருக்கு எடுத்துக்காட்டாக இருந்து வருகிறார் இவருடைய நுண்மாண் நுழைபுலத்தால் தமிழ்மக்கள் பெரும்பயனுற்றுள்ளனர், பொதுவாக ஆராய்ச்சி -யாளர் பலர் அணுகத் தயங்கும் பல துறைகளில் இவர்களது ஆராய்ச்சி சென்று நற்பயன் அளித்துள்ளது.

- பேராசிரியர் டாக்டர் அ. சிதம்பரநாதன்
17-1-61.

"அன்பர் திரு. மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் காட்சிக்கு எளியர்' பழகுதற்கு இனியர், தமிழன்னைக்கு அன்னார் அளித்துள்ள ஆராய்ச்சி அணி நூல்கள் பல.

பேராசிரியர் டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை
17-1-61

" உறுதியால் எழுந்தவர் நண்பர் வேங்கடசாமி மேதமை எனப்படுவது ஒன்பது பங்கு ஊக்கம், ஒரு பங்கு உள்ளொளி என் கருத்துக்கு அவர் மலை யிலக்காகப் பொலிகிறார்,,

டாக்டர். பா. நடராசன். -17-1-80

இத்தகு புகழ்சால் பெருமைகளுக்கு உரியவர்தாம் மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள், சீரிய ஒழுக்கம், பண்பாடு மனத்தெளிவு-உறுதி உடையவர்கள். இருமுறை தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராய் விளங்கினார்கள் நக்கீரன் கழக மறைமலையடிகள் ஆராய்ச்சிக் குழுவின் ஆயுட்கால உறுப்பினர். தொல்பொருள் ஆய்வுத் துறை சங்கத்தின் உறுப்பினர், தமிழ் எழுத்தாளர் சங்கம் இவருக்குக் கேடயம் அளித்துச் சிறப்பித்தது. 17-1-61இல் நடைபெற்ற இவர்களது மணிவிழாவில் இவருக்கு ஆராய்ச்சி அறிஞர் என்ற பட்டம் அளித்து மகிழ்ந்தனர் அறிஞர்கள். 1980 - மார்ச்சுத் திங்களில் மதுரைக்காமராசர் பல்கலைக்கழகம் தமிழக ஆளுநர் அவர்கள் தலைமையில் "பேரவைச் செம்மல்" என்ற பட்டமும் பொன்னாடையும் அளித்துப் பெருமை அடைந்தது.

இவர்கள் தமது அயராத உழைப்பால். —

" மறைந்துபோன தமிழ் நூல்கள், தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், மூன்றாம் நந்திவர்மன், நரசிம்மவர்மன், மகேந்திர வர்மன், சமணமும் தமிழும், பௌத்தமும் தமிழும், கிறித்தவமும் தமிழும், இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம், கௌதம புத்தர், அஞ்சிறைத் தும்பி, மாமல்லபுரத்து ஜைன சிற்பம், மனோன்மணீய உரை, சாசனச் செய்யுள் மஞ்சரி, துளுவநாட்டு வரலாறு, சமயம் வளர்த்த தமிழ் ஆகிய பல நூல்களை இயற்றித் தமிழ் அன்னைக்கு அளித்து மகிழ்தார்கள்.

இத்தகு சான்றோர் ஒரு சாதாரண தொடக்கநிலைப் பள்ளி ஆசிரியர். மயிலையில் புகழ் வாய்ந்த சித்தமருத்துவர் திரு சீனிவாசர் (நாயகர்) மகனாகத் தோன்றியவர், ஒரு சிறு நிறுவனத்தில் எழுத்தாராக இருந்து ஓய்வு நேரங்களில் தமிழ் பயின்று சிறந்த புலமை

பெற்ருர். 'திராவிடன்' இதழுக்கு துணை ஆசிரியராய் அமைந்தார். குடியாசு இதழுக்குக் கட்டுரைகள் எழுதினர். 'செந்தமிழ்ச் செல்வி, முதலிய இதழ்களின் வாயிலாகத் தம் ஆராய்ச்சியைத் தமிழ் மக்கள் பார்வைக்குக் கொண்டு வந்தார். மேலும் வளர்ந்த ஒரு சிறந்த ஆராய்ச்சி அறிஞராய்த் திகழ்ந்தார் ஆடம்பரம் ஆரவாரம் இல்லாத எளிய பண்பினராகிய இவரது எளிமை இவரது நடையிலும் காணப்பெற்றது. தமிழகம் முழுவதும் இவர்களது ஆய்வுத்திறன் பரவியது அவர்களது ஆய்வு தமிழ் முதுகலைப் பட்டம் பெறுபவர்களுக்கும் கருவியாக விளங்கியது.

மயிலை சீனி அவர்கள் பிறர் உளங்கவர் கள்வர், தவத்திரு விபுலானந்த அடிகள், தந்தை பெரியார் ஈ. வே. ரா , குத்தூசி குருசாமி, கல்வி நெறிக்காவலர் திரு. நெ. து. சு., சர்.பி.டி இராசன் பேராசிரியர் நீலகண்ட சாத்திரியார், பேராசிரியர் எஸ் வையாபுரிப் பிள்ளை, டாக்டர் கே. கே. பிள்ளை. டாக்டர், மு. ஆரோக்கியசாமி முதலியவர்களின் செல்லப்பிள்ளை ஆனர்,

சென்னைப் பல்கலைக்கழக நூலகத்தில் பட்டம் பெற்றவர்கள் தாம் உறுப்பினர் ஆகஇயலும். ஆனல் பல்கலைக் கழகப் பட்டம் பெருத மயிலை சீனி அவர்களின் ஆராய்ச்சிப் புலமையைக் கண்டு பல்கலைக்கழகநூலகம் இவரை உறுப்பினராக ஏற்றது. அப்பெருமை இவருக்கு வாய்த்த தனிப் பெருமை,

ஆராய்ச்சி நூலாசிரியர் பன்மொழிப் புலமையும், பன்னூலாய்வும். நன்னெறி யொழுக்கமும். நாவண்மையும், காய்தல் உவத்தலின்றி ஆய்வு செய்யும் திறனும், உள்ளத்துரனும் நடுநிலை பிறழா நலனும் நுண்ணறிவும், ஆய்ந்து கண்ட உண்மைகளை முன்பின் மலைவின்றி முறைபடத் தொகுத்து அறந்திறம்பாமல் அமைத்து, எளிமையும் தெளிவும் திட்பமும் அமைய நூலாக்கும் மாண்பும். நுணங்கிய கேள்வியும், அவாவின்மையும், அடக்கமும் அயரா உழைப்பும் இயல்பாக அமைந்திருத்தல் வேண்டும் என்பார்.

இத்தகைய நலங்கள் முற்றும் நன்கமைந்து திகழ்ந்த சிறப்பாளர்தாம் மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள். இவர்களது பண்பார் அடக்கத்திற்கு ஏற்றவகையில் நமது தமிழவேள் டாக்டர் கலைஞர் அவர்கள் இத் தேர்தல் முடிவுற்றதும் தக்கதோர் நினைவுக் குறிப்பு வழங்குவார்கள் என்பது உறுதி. ஆராய்ச்சி என்பது என்றும் இளமையானது, பசுமையானது. எனவே நமது நல்லறிஞர் நினைவும் நம்மிடை என்றும் இளமையாய்ப் பசுமையாய் இருப்பதாக!

ஊழிற் பெருவலி யா உள?

திரு. கோ. பஞ்சாபகேசன்

திருவிடைமருதூர்

ஊழ் என்பது பழவினை முன்னைய பல பிறவிகளிற் செய்த வினைகள், செய்தவனையே சென்று தவறாது சேர்தலாகிய முறையே, ஊழ்; விதி, உண்மை, பால்நியதி, தெய்வம் முதலியன ஒருபொருள் பயப்பன, ஆன்மாக்கள் அநாதி. இறைவன் என்றும் உள்ளவன், ஆன்மாவும் அத்தன்மையுடையனவே, அவைகள் செய்யும் நல்வினை தீவினைக் கீடாகவே உடலை எடுக்கின்றன. நல்வினை மிகுந்தால் தேவ சரீரத்தையும், தீவினைமிகுந்தால் விலங்கு, பறவை, பாம்பு, பல்லி முதலிய இழிந்த சரீரங்களையும், இருவினைகளும் சமமானால் மானிட உடலையும் அடைகின்றன. இவ்வாறு மானிட சரீரம் பெற்ற ஆன்மாக்கள் பழம்பிறவிகள் பலவற்றிற் செய்த நல்வினைகளை அனுபவிக்கும் காலத்தில் நிலம், புலம், தனம், தானியம், மணி, பணி முதலிய செல்வங்களைப் பெற்றுச் சுகபோகங்களை அனுபவிக்கத் தக்கவர்களாவார்கள். தீவினைகளை அனுபவிக்கும் காலத்தில் வறுமை பசி, பிணி, முதலியவற்றால் துன்பத்தை அனுபவிக்கக் கூடியவர்க -ளாவார்கள். இந்த இருவினைகளும் ஆன்மாக்களைப் பிறவிகடோறும் தொடர்ந்து பற்றுவதால் இன்ப துன்பங்கள் உண்டாகின்றன. வினைப்பயன் அவ்வினையைச் செய்தவனையே சேரும் நியதி உடையது அன்று ஈன்ற மழவிளம் பசுக்கன்றுகளை ஒரு கொட்டிலில் அடைத்துப் பின்பு அவிழ்த்துவிட்டால், அதனதன் தாய்மடியைச் சப்புதல் போல் வினைகளும் அவற்றைச் செய்தவனையே நாடுமின்றி, வேறென்னும்?

உதாரணமாக, தத்துவநூலில் அனுபவ முதிர்ந்த பெரியார் ஒருவருக்கு பழவினையின் பயனாக வயிற்றிற் குனம நோயுண்டாகித் துன்புறுத்திக் கொண்டிருந்தது. அப்பொழுது அவரோடு உரையாடுதற்கு மற்றொரு தத்துவஞானி வருவதையறிந்து அம்மகான் ஒரு தர்ப்பைப் புல்லைச் சக்கரமாக வளைத்து, அதில் அந்நோயை இருக்கும் படிசெய்து விட்டு வந்த அந்த ஞானியுடன் உரையாடிக் கொண்டிருக் -கும் பொழுது வட்ட வடிவமான அந்த நாணற்புல் ஆங்கு அங்கு மிங்குமாக உருண்டுகொண்டிருப்பதை அந்த ஞானி கண்ணுற்று 'என்னை? இந்தப்புல் இப்படி அங்குமிங்கும் உருண்டுகொண்டிருக் கிறதே' என்று அப்பெரியவரைக் கேட்டார். அப்பெரியவர் 'முன்னை வினைப்பயனால் குன்மநோய் அடியேனை வருத்திக் கொண்டிருந்தது தாங்கள் வந்து உரையாடிக் கொண்டிருக்குங்கால் அந்நோய் வாதனையால் அதற்கு இடையூறு உண்டாகுமே என்று கருதி உரையாடல் முடியும் வரை அந்நோயை இப்புல்லில் இருக்கும்

படிச் செய்தேன். அதனால் அப்புல் அங்கும் இங்கும் உருளுகிறது' என்று பதில் கூறினர். அதற்கு அத்தத்துவ ஞானி, அந்நோயை அப்புல்லோடே கழியும்படி செய்யலாகாதா?' என்றார். அதனைக் கேட்ட அப்பெரியார், அப்படி அப்புல்லோடே கழியும் படி அந்நோயைச் செய்துவிடலாம், எஞ்சிய அந்நோய் வாதையை அனுபவிக்க இன்னொரு பிறவி எடுக்க வேண்டுமே என்று அஞ்சி, அதன் அனுபவம் இப்பிறவியோடு ஒழிதலே நலமென எண்ணியே இப்படிச்செய்தேனென்று கூறினர். பெரிய மாமன்னர்முதல் மற்றைய மனிதர்கள்யாவரிலும் வினைப்பயனை வெல்வார்ஒருவருமில்லை அதனை வெல்லும் உபாயம் காணப்படவில்லை.

மனிதவர்க்கத்தில் இப்படி என்றால்,

இந்திரன், சந்திரன் முதலிய தேவர்களையும் வினைப்பயன் தொடருமோ என்றாலோ,

"சந்திரனுக்குக் குடலூனம் தனதனுக்கோர் கண்ணூனம் தருவின் நீழல், இந்திரற்கோ பகக்குறியாம் இயமனுக்கோ புழுக்காலாம் இரவியீன்ற, மைந்தனுக்கோர் கால்முடமாம் வனசனுக்கோர் தலைக்குறையாம் வரலாறிதேல் பந்தமுள்ள மானிடரை விதி விடுமோ ஆலவாய்ப் பதியுளானே."

என்றபடி, சந்திரன் இந்திரன் முதலிய தேவர்களும் அவரவர்கள் செய்த வினைகட்கேற்ப உடற் குறை தலைக்குறை முதலியவற்றை யடைந்துள்ளார் எனக் காணப்படுகிறது. தேவர்கள் நிலையே இவ்வாறு னால் மக்களைப் பற்றிக் கேட்பானேன்? முன்னைய பலபிறவிகளிற் பலவித வினைகளைச் செய்தவனுக்கு அவ்வினைப்பயன் முறைப்படி வருமா? பிறழ்ந்து வருமா? என்றாலோ — பல விதமாய் வரும். வினைகளின்வன்மை மென்மைகட்கு ஏற்றவாறு பயனளிக்கும் 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்று கூறியவாறு ஒரு முகூர்த்த நேரத்திற் செய்தது அடுத்த முகூர்த்தத்தில் அனுபவிக்க நேரும் அல்லது அநேகபிறவிகளிற் செய்தது இன்னும் பலபிறவிகள் எடுத்தபின் அநுபவிக்க நேரும், உதாரணமாக, நாம் விளைநிலத்தைப் பண்படுத்தி பாத்திகள் கட்டி ஒரு பாத்தியில் கீரை, மற்றொன்றில் மஞ்சள் இன்னொன்றில் வாழை, பிறிதொன்றில் தென்னை மற்றதில் பனையும் ஒரே நாளையில் விதைத்துப் பயிரிடுகிறோம். ஆனால் கீரை பத்து நாளையிலும் மஞ்சள் மூன்று மாதத்திலும் வாழை ஆறுமாதத்திலும் தென்னை ஐந்து, பனை பத்து வருடங்களிலும் பயனளிப்பனவாகும். அது போல வினைப்பயனுமாம். மேலும், ஊழ்வினையே செல்வம் அடைதற்கும், கல்வி பெருவதற்கும் காரணம் என்று சொல்லப் படுகின்றது. செல்வப் பொருள் மிக்குடையோரிடத்துக் கல்வி இல்லை; கல்விப் பொருளுடையோரிடத்துச் செல்வம் இல்லையே என்றாலோ,

அவற்றிற்கேற்ற வினைகளை முற்பிறவிகளிற் செய்ததினாலும் செய்யாமையாலுமே அவ்வாறாயின என்றறிய வேண்டும். தேவர் முதலிய யாவலரையும் தொடரும் வலிமையுடைய விதியைவிட வலிமையுடையது வேறொன்றுமில்லை என்பார். அதனை விளக்க மந்திரம் தந்திரம் முதலியன எதனைச் செய்தாலும், அவற்றையெல்லாம் புறங்கொடுத்துத் தான் முன்னே நிற்கும். ஆனால், இடையறாது தீவிரதர முயற்சி செய்வார், ஊழையும் வெல்லும் ஆற்றலுடையவராவார். மார்க்கண்டேயர், சுவேதன் முதலியோர் இதற்குப் போதிய சான்றாகும். மார்க்கண்டேயருக்கு விதித்த பதினாறு வயது கடந்து, என்றும் அழியாத சிரஞ்சீவி பட்டம் அவர் பெற்றது எதனால்? இடையறாது இறைவனை வழிபட்டமையாலல்லவோ? தான் அது, அது தானாகவிளங்கும் அத்துவிதமாகிய உயரிய நிலையை அடைந்தவர்க்கல்லது, ஏனையோரெல்லாரையும் ஊழ்வினை இறுகப் பற்றும் வன்மையுடையதாதலினால், திருவள்ளுவர்

''ஊழிற் பெருவலியாவுள? மற்றொன்று
சூழினும் தான் முந்துறும்,''

என்று ஊழின் வலிமையை வற்புறுத்தியுள்ளார்.

''மக்கள் மொழி ?''

வி. பொ. பழனிவேலனார்

'மக்கள் மொழி' என்றால் மக்கள் பேசும் மொழி. மக்கள் புரிந்து கொள்ளக் கூடிய மொழி; மக்களிடையே வழங்கும் மொழி எனப்பொருள் படும்.

இன்றைய புதுவது புனையும் எழுத்தாளர், முற்போக்கு எழுத்தாளர், பெயர்போன எழுத்தாளர் என்பவரெல்லாம் மக்களுக்குப் புரியும்படி அவர்கள் வழங்கும் மொழியில் எழுதுவது தான் நன்றாகும்; கடுந்தமிழில், மக்களுக்குப்புரியாத இலக்கிய நடையில் எழுதக்கூடாது என்று கூக்குரலெழுப்புகின்றனர். இன்றைய எழுத்தாளர் இங்ஙனம் இயம்புவதில் பொருளுண்டா? எனக்காண்போம்,

''மக்கள் மொழி'' என்பது ஒரு தனி மொழியா? மக்களிடையே மொழி எப்படி வழக்கிற்கு வந்தது? பிறக்கும் போதே

மொழியறிவுடன் பிறந்தார்களா? மொழியறிவு, பேசும் அறிவு மக்களுடே எங்ஙனம் உருவாயிற்று? என்பன அறிஞர் எண்ணிப் பார்க்கத்தக்கன.

தமிழ்மொழியை எடுத்துக்கொண்டால் தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் மக்கள் பேச்சுவழக்கில் வேறுபாடுகள் காணப்படுவதை நாம் நன்கறிவோம். இவைபற்றித் தனிநூல் கூட எழுதலாம், ஒருசிலர் எழுதியிருப்பதாகவும் தெரிகிறது.

மாவட்டந்தோறும் "மக்கள் மொழி" ஏன்? ஒன்றுக இல்லை? தஞ்சை மாவட்டத்தினர் "வயல்" என்று சொல்வதை முகவை மாவட்டத்தினர் 'செய்' என்கின்றனர்; சில மாவட்டத்தில் 'கழனி' என்கின்றனர், தஞ்சையில் 'சாவி' என்பதை மதுரையில் 'திறவுக் குச்சி' 'திறவு' என்கின்றனர் மக்கள் மொழி என்றால் எங்கும் ஒரேகணக்காய்த் தானே இருத்தல் வேண்டும்? ஏன் வேறு படுகிறது? ஆயின், இன்றைய எழுத்தாளர் மாவட்டத்திற்கு மாவட்-டம் தனித்தனியாக நூல் எழுதுகின்றனர் போலும்!

'இழுத்துக் கொண்டு போனான்' என்று சொல்ல வேண்டி-யதை 'இஸ்துக்கினு போனான்' என்கின்றனர் சென்னை மாநகரில், கோழிமுட்டையை 'கோயிமுட்டை' என்கின்றனர். இதுதான் மக்கள்மொழியா? எழுத்தாளர் எண்ணிப் பார்க்க வேண்டும்.

நகர்ப்புறச் சூழலுக்கு ஆள்படாத நாட்டுப்புறத்தார் பிற மொழிக் கலக்காமல் தம் இயல்பான மொழியில் பேசுவதை நாம் அறிவோம். நகர்ச்சூழலுக்குட்பட்ட மக்கள் வடமொழி ஆங்கிலம் இந்தி பாரசிகம் முதலியமொழிகள் கலந்து பேசுகின்றனர். தமிழ் நாட்டிலுள்ள மக்களுக்கு இத்தனை மொழிகள் எப்படித் தெரியும் படித்தார்களா? தமிழ்மொழியைப்படிக்க, எழுதத் தெரியாத மக்களே மேற்கூறிய பல மொழிச்சொற்களையும் கலந்து பேசுகின்றனர்; யார் கற்றுக் கொடுத்தவர்?

கல்வியறிவில்லாத மக்கள் பல சொற்களைப்பலுக்க [உச்சரிக்க] த் தெரியாமல் தவறாகப் பலுக்குகின்றனர். ,, சொன்னான்" என்பதை 'சென்னான்' என்றும், 'கோழி' என்பதை, 'கோளி' என்றும், ,கோயி' என்றும், 'வெள்ளம்' என்பதை 'வெல்லம்' என்றும் சொல்லுகின்றனர், இப்படிப்பேசுவது 'மக்கள் மொழியா" ஆயின், பலசொற்கள் பிழைபட வழங்குகின்றனர், அங்ஙனம் பல பிறமொழி சொற்களையும் தவறாகப் பேசுவதையும் நாம் அறிவோம் விரிக்கின் பெருகுமென விடுக்கின்றேம்.

இன்றைய முன்னணி எழுத்தாளர் கூறும் 'மக்கள் மொழி, என்பது எது? படித்தவர் பலர், மொழியறிவு இன்மையால், முற்

பேசக்கு எழுத்தாளர் பலமொழி கலந்தெழுதும் நடையைப் படித்த தனால் அப்படியே அவர்களும் பின்பற்றத் தொடங்குகின்றனர். அப்பேச்சைக் கேட்கும் மக்கள் அவ்வாறே பேச முற்படுகின்றனர்.

எங்கள் வீட்டில் படிக்காத பாட்டி ஒருத்தி இருக்கிறாள் அவள் "வேஸ்ட் "பண்ணாதே:" ஒவராப் " பேசாதே; "சினிமா" வுக்குப் போவோமா? "எலக்ஷன்" எப்போது? "பஸ்ஸுக்குப்" போ: "ரயிலில்" போக வேண்டாம்; என்றெல்லாம் சொல்லுகிறாள் இச் சொற்களை இவட்கு யார் கற்றுக் கொடுத்தவர்? படித்தவர் தெரிந்தவர் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்த மூதாட்டி, தானும் பேசத் தொடங்கிவிட்டாள்.

ஆகையால், ' மக்கள் மொழி ' என்பது படித்தவர் பயன்படுத் தும் மொழியே யாகும். இன்றைய முன்னணி எழுத்தாளர் தமக்குத் தெரிந்த மொழிகளை யெல்லாம் தம் எழுத்துக்களில் எடுத்தாளுகின் றனர்; அவற்றைப் படிக்கும் படித்தவர், பிறர்க்குச் சொல்கின்றனர்; அவர்கள் தங்கள் காதால் கேட்டுந் தாங்களும் அவ்வாறு பேசுகின் றனர். இதுதான் " மக்கள் மொழி " என்கின்றனர்.

இன்றைய எழுத்தாளர் நல்ல மொழியறிவுடையவர்களா யிருந்தால், மொழிப்பற்றுடையவர்களாயிருந்தால் தம் படைப்பு களில் வேற்றுமொழி கலக்காமல் எழுதுவர் தமிழை அரைகுறை யாகப் படித்து, பிற மொழியையும் அவ்வாறேகற்று, எழுதும்போது தமிழில் தகுந்த சொல் தெரியாமையால், அதைத் தெரிந்து கொள்ள முயலாமல், தம் கருத்தைப் புலப்படுத்தும் வேற்றுமொழிச் சொல்லைப் பெய்து எழுதிவிடுகிறார். அதைப் படிப்பவரும் கேட்ப வரும் அப்படியே பேசவும், எழுதவும் தொடங்கி விடுகின்றனர். இதையே அவர்கள் (எழுத்தாளர்) 'மக்கள் தமிழ்' அல்லது 'மக்கள் மொழி' என்று பெயர் சூட்டிவிட்டனர். எனவே, 'மக்கள் மொழி' என்று ஒருமொழி தானே உண்டாகவில்லை என அறிவீராக.

அரசன் எவ்வழியோ அவ்வழியே குடிகளும் என்றாற்போல 'எழுத்தாளர் எவ்வழியோ அவ்வழியே படிப்பவரும்' என அறிக.

இன்றைய எழுத்தாளர் நல்ல, தூய தமிழில் எழுத முற்பட் டால் மக்களும் அவர்தம் படைப்புகளைப் படித்தும், பிறர்க்குரைத் தும் நல்ல தமிழில் பேசுவர், எழுதுவர், கொச்சை, கலப்பு மொழி வழங்கா.

மக்கள் மொழியை உருவாக்கிய எழுத்தாளர் தூயமொழி யையும் உருவாக்கலாம். ஆனால், அவர்கட்குத் தூயதமிழறிவும், தமிழ்ப்பற்றும் தேவை. மக்கள் மொழி மக்கிப்போக! தூயமொழி தோன்றுக! வழக்கில் வந்தால்தானே மக்கள் மனத்தில் இடம் பெறும்?

மங்கல மடந்தை - கண்ணகி

துணைபேராசிரியர், சி. கோ தெய்வநாயகம்
M. A., M. Phil., B Sc.,
Dip-in-Agri, Cert-in-Epi, Cert-in-Ling.

உரைசால் பத்தினி,

'மங்கல மடத்தை கண்ணகி' என்ற பொருண்மையினை இக் கட்டுரையிற் விளக்க முறை ஆய்வழிக் காணலாம்.

சிலப்பதிகாரம் முழுதும், கண்ணகி போற்றப்படுபவராகவும், வணங்கப்படுபவராகவுமே, காட்டப்பட்டுள்ளார், கற்புக் கடம் பூண்ட கண்ணகியை, இளங்கோவடிகளே ஏத்திப் புகழ்வதோடமையாது, சிலப்பதிகாரப் பாத்திரங்கள் அனைத்தும் வாழ்த்தி வணங்கிடும் தெய்வத் தகுதியிலேயே படைத்துள்ளார், நுணுகிக் காண்மார், இவ்விலக்கியத்தினை சிலப்பதிகாரம் என்றலினும், "கண்ணகி காப்பியம்" என்றேயுணரப் பெறுவர் எனலாகும். அந்நிலையில் நடுகல் வழிபாடு பெற்ற ஒரே பெண்ணாகிய கண்ணகி' கண்ணகியார் தேவி, மாபத்தினி, வீரபத்தினி, வைப்பப் பெருந்தெய்யம், கற்புக்கடம் பூண்ட தெய்வம், கொங்கச் செல்வி, குடமலையாட்டி, தென்டிறற் பாவை, செய்தவக் கொழுந்து, திருமாபத்தினி, நங்கை, ஆயிழை, சேயிழை, பொற்றொடி, பொற்றொடி மாதர், பத்தினிக் கடவுள், மங்கல மடந்தை போன்ற பல்வேறு சிறப்புப் பெயர்களாற் சிறப்பிக்கப் பெறுகின்றார்.

இச்சிறப்புப் பெயர்களுள் ஒன்றான 'மங்கல மடந்தை' என்ற பெயராற் கண்ணகியாரே சுட்டப்பட்டுள்ளார், 'மங்கல மடந்தை' என்றும், மங்கல மடந்தைக் கோட்டம் என்றும் கண்ணகியாரே வழங்கப் பெற்று, வணங்கப் பெற்ற திறம் ஆயத்தக்கது;

மங்கலச் சொல்

ஆய்விற்குரிய கீழ்க்காணும் மங்கலத் தொடர்பான சொற்களே சிலப்பதிகாரத்தில் குறிக்கப்பட்டுள்ளன.

1. மங்கலச் சொல் — (அரு. உரை 3: 150) (அடி—உரை)
2. மங்கலத்தாசியர் — (6: 125) (அடி—உரை) அழகுமாம
3. மங்கல நீர் — (15: 131) அடி. உரை
4; மங்கல நெடுங்கொடி — (5: 146) அட்ட மங்கலத்தோடு ஐராவதம் எழுதிய கொடி — அடி. உரை.
5. மங்கலப் பண் — (3: 150)

6. மங்கலம் — (கலியாணம்—பதி: 62) (1, 64)
(அழகு — 6, 125)

7. மங்கலம் எட்டு — (5: 151)

8. மங்கல மடந்தை—மங்கலச்தேவி; என்றது கண்ணகியை (28: 51)

9 மங்கல மடந்தைக் கோட்டம் — (30: 53) (30: 88)

10. மங்கல மறையோர் — (10: 147)

11. மங்கலமொழி — (அடி. உரை 15: 27)

12. மங்கல வணி —(அரு: உரை 1; 46-மாங்கலிய சூத்திரம் (2: 63) (4: 50)

13. மங்கல வாழ்த்து — (பதி: 63) அரு உரை

14. மங்கல வாழ்த்துப் பாடல் — (பதி: 63) (1; தலைப்பு)

15. மங்கலா தேவி — (அரு. உரை 30: 53)

16. மங்கலாபுரம் — (உ. வே. சா. குறிப்பு 30: 53(

இங்குறிப்புகளையும், சிலம்பில் இவற்றது பொருண்மையும் காண

1. இற்கிழமை பெற்றியும்

2, பொலிவுற்ற அழகு

ஆகிய இருபொருட்படவே இம் 'மங்கலம்'. என்ற சொல் ஆளப்பட்டுள்ளது புலனும்,

முதற்பொருளதாய இற்கிழமைப் பெற்றியுடையவர், கண்ணகி ஒருவரே. எனவேதான் குடிமக்கள் காப்பியமாக புதுமரபு படைத்து. மேலும் நாயகிக் காப்பியமாக சிலம்பினை இளங்கோ படைத்துள்ளார். அடியார்க்கு நல்லார் இதனை ஒர்ந்தே

'' திங்களை முற்கூறினர்! பத்தினியை ஏத்துதல் உட் கோளாதலின் '' என்றார்.

மங்கல நீர், மங்கலப்பண், மங்கலம், மங்கல மறையோர், மங்கல மொழி. மங்கலவணி, மங்கல வாழ்த்துப் பாடல் முதலியன திருமணத்தொடு தொடர்புடையனவாதலின் [மங்கல மெனச் சுட்டப்பட்டுள்ளன.

மங்கலத் தாசியர், மங்கல நெடுங்கொடி, அட்ட மங்கலம் முதலியன பொலிவு, சிறப்பு என்றபொருள்பற்றி இடம் பெற்றுள்ளன,

இவையனைத்தினும் தலைமைப் பொருள் பயப்பதாக இற்கிழமைப் பீடே விளங்குகின்றது. மங்கலமுமதுவே.

மடந்தை

இனி மடந்தை என்ற சொல்லைக் காணலாகும். மடந்தை இற்கிழமைக்குரிய நற்பருவத்தாள் பன்னீராட்டைக்கும், பதினு ராட்டைக்கும் இடைப்பட்ட பருவம், கண்ணகியார் மனையறம்புக்க அகவை பன்னீராட்டைப் பருவமே. சிலம்பு.

,, ஈகவான் கொடியன்னாள், ஈராறுண்டகவையாள் '' எனக் குறிக்கும், (1: 24)

மங்கைப் பருவம் நிறைந்து, மடந்தைப் பருவத்தினைச் சேருங்காலத்தே கண்ணகியார் இல்லறம் ஏற்றார், '' யாண்டு சில கழிந்தன இப்பெருங்கிழமையில் '' கண்ணகிக்கு. ஆதலின் நல்ல மடந்தைப் பருவத்தினராக விளங்கிய போதே, மாதவிபாற் கோவலன் பிரிந்தான். மாதவிக்கும் அதுபோது மடந்தைப் பருவமே. எழாமக வையில் ஆடற் தொடங்கி, பின்னிராட்டையில் அரங்கேறி, தலைக் கோல் பெற்று, அன்று மாலையே கோவலனையும் பெற்று, அவனால் மணிமேகலையையும் பெற்ற மாதவி மடந்தைப் பருவத்தினளே என்பது வெள்ளிடை. மணிமேகலையின் பெயர் சூட்டு விழாவில் கோவலன் மங்கல மடந்தையாகிய கண்ணகியுடனும், மாதவி தன்னொடும் பொன் வழங்கி மகிழ்ந்தமையினையும் அடிகள் குறித்தே செல்கின்றார்,

'' அணிமேகலையார் ஆயிரங் கணிகையர்
மணிமேகலையென வாழ்த்திய ஞான்று
மங்கலமடந்தை, மாதவி தன்னொடும்
செம்பொன்மாரி செங்கையிற் பொழிய ''
(15: 38—41)

மங்கல மந்டதையோடும் (கண்ணகியோடும்) மாதவியோடும் தானம் செய்த நிகழ்ச்சி இளங்கோவடிகளால் மிகத் தெளிவாகவே சுட்டப்பட்டுள்ளது.

மாதவியின் மகளாயினும், கோவலனது மகள் என்ற காரணத் தால் கண்ணகி, மணிமேகலையைத் தன் மகள் போன்றே போற்றி யிருக்கின்றார். மணிமேகலையும் கண்ணகியாரைத் தம் தாயாகவே வழிபட்டிருக்கிறாள். இம்மனப்பான்மையுடன்தான் கண்ணகி மணிமேகலையின் பிறந்தநாளை கொண்டாடியுள்ளார், கோவலனும்

(கண்ணகி) மங்கல மடந்தையாருடன் சேர்ந்து தம்மில்லத்தே பொன் வழங்கி தானம் செய்துள்ளான். பின்னர் மாதவியுடன் அவளில்லத்தே தானம் புரிந்துள்ளான். இதனையே மேற்தொடர்கள் குறிப்பிடு கின்றன. கண்ணகியுன் மகளாகவும் மாதவி கருதப்படுவதனை,

"காவலன் பேரூர் கனையெரி பொத்திய
மாபெரும் பத்தினி மகள் மணிமேகலை"
(மணி 2: 54—55)

"அணியிழை அந்தரம் ஆறுயெழுந்து
தனியாக் காதல் தாய் கண்ணகியையும்
கொடைகெழு தாதை கோவலன்தன்னையும்
(மணி: 26: 1—3]

மடப்பம்

ஆயினும் ஒடுவும், உப்பும் அறியார் 'மங்கல மடந்தை' யினை மாதவிக் கேற்றுவர். அதுநிற்க. கானல் வரியாற் பிரிந்த கோவலன் கண்ணகியுடன் மதுரை சென்றனன், பட்டனன். அவலமுற்று, வழக் கின் வென்று, மதுரையினை எரி கொளுவிய கண்ணகியாரின் உடலுறுப்புக்களும் மடத்தைப் பருவத்தினவ இதனை வழக்குரைத்த கண்ணகியாரைப் பாண்டியன் வினவுந் திறத்தாலும்

"நீர்வார் கண்ணை எம்முன் வந்தோய்
யாரையோ நீ மடக்கொடி யோய்" (20, 48—49)

என அடிகள் சுட்டுவர்.

"மட்டார் மறுகின் மணிமுலையை வட்டித்து
விட்டாள் எறிந்தாள் விளங்கிழையாள்"
(21: 44—45)

"முதிரா முலைமுகத் தெழுந்த தீயின்
மதுரை மூதூர் மாநகர் சுட்டது" (25: 76—76)

என்ற தொடர்களும் இக்கருத்தினை வெளிப்படுத்தி நிற்கின்றன. ஆதலின் கண்ணகியார் தெய்வமாகிய அகவையும் மடத்தைப் பருவமே என்பது தெள்ளிது. இதனை

"முலைமுகர் திருகிய மூவா மேனிப் பத்தினி (30: 150)

என்பதிலும் காணலாம்:

உரைசால் படம்

பெண்ணுக்குரிய குணங்களாக தமிழ் மக்களின் வாழ்வியல் இலக்கணம் — தொல்காப்பியம் சுட்டிக்காட்டும்

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு (தொல்) என்ற பெண்மையின் நாற்படையாம் நாற்குணங்களுள் இரண்டாவதாய 'மடம்' பொருந்தியவராயும் கண்ணகி காணப்படுகிறுர்.

சலந்தரு கொள்கை சலதியாம் நாடகமேத்தும் நாடகக் கணிகை மாதவியோடு ஆடிய, கொள்கையின், குலந்தரு வான் பொருள் குன்றந் தொலைத்து, இலம்பாடு நாணுறுத்த வந் கே (ா) வலனிடம் ''சிலம்புள கொண்ம்'' என வழங்கும் கண்ணகியின் மடம் இளங்கோவால் உணரப்பட்டதேயாம். மேலும்

காடும், நாடும் காண வெளிப் போந்த, கண்ணகியின் ''வண்ணச்சீரடி மண்மகள்'' அதுவரை அறியாதவொன்று. மடப்பத்தின் உயர்வு மேலும் சிறக்க ஆறைங்காதம் அப்பாலுள்ள மதுரையினை தம்வீட்டின் புறக்கடை வாயிலைக் கடந்த ஒரு காதத் தூரப் பயணத்திலேயே,

... ...'' கவுந்திப் பள்ளிப்
பூமரப் பொதும்பர்ப் பொருந்தி, யாங்க
ணிறுங்கொடி நுசுப்போ டினைந்தடி வருந்தி
நறும்பல் கூந்தல் குறும்பல வுயிர்த்து
முதிராக் கிளவியின் முள்ளெயி றிலங்க
மதுரை மூதூர் யாதென '' (10: 36—91)

கோவலனிடம் யாதென வினவும் கண்ணகியின் மடப்பத்தை அறிய வருகின்றபோது 1 காப்பாற்றப்பட வேண்டிய 2 தனித்திறப் பெண்மை உணரப்படுகிறது.

தெய்வமுற்ற சாலினி, கண்ணகியாரை கொங்கச்செல்வி, குடமலையாட்டி, தென்றமிழ்ப் பாவை, திருமாமணி எனப் போற்ற

'' பேதுறவு மொழிந்தனள் மூதறிவாட்டி யென்று
அரும்பெறற் கணவன் பெரும்புறத் தொடுங்கி
விருந்தின் மூர லரும்பின ணிற்ப'' (12: 51—53)

தோற்றந்தரும் கண்ணகியாரை மடப்பத்திற்கோர் இலக்கணமாக வன்றே இளங்கோவடிகள் புலப்படுத்துகின்றனர்.

மங்கலப் பெண்,

கண்ணகி கைம்பெண்ணு? இவ்வினுவிற்கு சிலம்பு நிறைவாகச் செப்புகிறது.

---

1 பெண்மையின் உயர்வு விளக்கம்
2 போற்றப்பட வேண்டிய

1: 1.

கண்ணகியார் கைம்பெண் அல்ல, இளங்கோவடிகள் தங் காப்பியம் முழுவதிலும் குறித்துச் செல்லும் கருத்து-கண்ணகியார் மங்கல மடந்தையே யாவர் என்பதேயாம், அப்படியாயின் கோவலன் மதுரையில் கொலேக்களப்பட்டபின் கண்ணகியார் எவ்வாறு மங்கலப் பெண்ணாக இருந்திருக்க முடியும்? அழைக்கப் பெற முடியும்? என்ற வினு எழலாம், விடை கூறுதும்.

சிலப்பதிகார காவிய நாயகியின் வாழ்வு இரு பகுதிகளாக இலங்குகின்றது. ஒன்று மனித வாழ்வு — வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தமை; தெய்வ வாழ்வு — வானுறையும் தேவர்க்கு நல்விருந் தானது. மனித வாழ்வு மங்கல வாழ்த்துப்பாடல் முதல் கொலேக்களக் காதைவரையிலாம். ஆய்ச்சியர் குரவை முதலாக வரந்தரு காதை முடிய தெய்வ வாழ்வு காட்டப்பெறுகின்றது.

1: 2.

மனித வாழ்வியல் காலத்தில் கண்ணகியார் தன் கணவன் கோவலனேப் (அரங்கேற்றுக்காதை)பிரிந்து பின் கனத்திற முரைத்த காதையில் கூடி, மதுரைக்கு, கணவனெடு கூடிய மங்கலப் பெண்ணுக வாழச்சென்ருர்.

சென்ற இடத்தில் (கொலேக்களக் காதையில்) கோவலன் இறந்தே போயினன். ஆயினும் மீண்டுமவனே கட்டுரைக் காதையில் நிலேயாகப்பெற்று அழியா மகிழ்ச்சியினும்பருலகிற்கு வாழ்வாங்கு வாழச் செல்லுகிருர், எங்கும் கண்ணகியார் கணவனே இனிபெற முடியாது எனும் நிலேயில் இழந்து, கைம்மை நோயுற்ருராக, கையறுநிலே அடைந்ததாக அடிகள் குறித்து சொல்லவே இல்லே.

2: 0.

மாதவிபால் மயங்கி, வடுநீங்கு சிறப்பின் தன் மனேயகம் மறந்திருந்து வருந்திய கோவலனேப் பெருநிலேயில், சற்று அவல முற்று

"அஞ்செஞ் சீறடி அணிசிலம் பொழிய மெல்துகிலல்குல்
மேகலே நீங்க ... ... கண்ணகியார்
(4: 47—57)

தோற்றமளித்தார்' அதேபோன்றுதான் கோவலன் கொலேபட்ட பிறகும்' கொற்றவை வாயிற் பொற்ருெடி தகர்த்து, ஊதுலேக் குறு கின் உயிர்த்து, மறுகிடைமறுகி, மயங்கலும் மயங்கி நெடுவேள் குன்று சென்ருர். (தொடரும்)

கடைச்சங்கம்: கால ஆராய்ச்சி ஒரு புதிய சான்று.

பூரண சந்திர ஜீவா (எம். ஏ.)
அஞ்சல் வழிக் கல்வி
— மதுரை - காமராசர் பல்கலைக்கழகம், —

சங்க காலம் பற்றிய ஆய்வுகள் பல்வேறு காலங்களில் பல்வேறு அறிஞர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் இத்துறை எல்லையற்றப் பரப்புடையதாகப் பரந்துள்ளது. தினமும் வெளிக் கொணரப்படும் ஆய்வு முடிவுகள் நம் அறிவை மேலும் வளர்க்கக் காணலாம். சங்ககாலம் பற்றிய புதியதொரு சான்றினை இக்கட்டுரையில் விளக்க விரும்புகின்றேன்.

சங்க காலம் பற்றிய ஆய்வுகளுக்கு இலங்கையை கி. பி 173 - 195 இல் ஆண்ட கயவாகு மன்னன் காலத்தைச் சிலப்பதிகார மரபின் அடிப்படையில் ஏற்கிறோம். கயவாகுவின் சமகாலத்தினன் சேரன் செங்குட்டுவன். அவனுக்கு முந்தியவன் பல்யானைச் செல்கெழுகுட்டுவன், அவனுக்கும் முந்தியவர்களாக யானைகட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையும், இமயவரம்பனும் என்பது சிலம்பில் காணலாகும் மரபு [1]. சேரர் தோன்றல் இளங்கோவடிகள் கூற்று உண்மையாகவே இருக்கும்.

மாந்தரஞ் சேரல் எனப்படும் யானைகட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறையின் காலத்தை நிறுவும் சான்றொன்று இக்கட்டுரையில் இறப்படுகிறது. அம்மன்னன் இறந்தபோது வானில் ஒரு விண்மீன் எரிந்து வீழ்ந்ததாக (Nova) கூடலூர் கிழார் என்னும் வானியல் வல்லுநரான புலவர் பாடியப் பாடலொன்று புறநானூற்றில் உள்ளது [2] பாடல் வருமாறு :-

> ஆடிய லழற்குட்டத்
> தாரிரு ளரையிரவில்
> முடப்பனையத்து வேர்முதலாக்
> கடைக்குளத்துக் கயங்காயப்
> பங்குனியுய ரழுவத்துத்
> தலைநாண்மீ னிலைதிரிய
> நிலைநாண்மீ னதனெதி ரேர்தரத்
> தொன்னாண்மீன்றுறைபடியப்

பசிச் செல்லா தூசி முன்னு
தளக்கார்த்திணை விளக்காகக்
கனையெரி பரப்பக் காலெதிர்பு பொங்கி
ஒருமீன் விழுந்தன்றால் விசும்பி னானே
அதுகண் டியாமும் பிறரும் பல்வே றிரவலர்
பறையிசை யருவி நன்னாட்டுப் பொருநன்
நோயில னாயி னன்றுமற் றில்லென
அழிந்த நெஞ்சு மடியுளம் பரப்ப
அஞ்சின மெழுநாள் வந்தன் றின்றே
... ...
மேலோ ருலக மெய்திள னாகலின்'

இப்பாடலின் கருத்துச் சுருக்கம் :—

மேட இராசி பொருந்திய கார்த்திகை நாளின் முதற்காலில்! இருளுடையப் பாதி இரவில் முடப்பனை போல் வடிவை உடைய அனுடத்தின் அடியின் வெள்ளி முதலாக, கயவடிவுடைய புனர்பூசத்துக் கடையின் வெள்ளி எல்லையாக விளங்க பங்குனி மாத முதற் பதினைந்து நாளுள், உச்சமான உத்திரம் உச்சியில் இருந்து சாய அதற்கு எட்டாம் மீனை மிருகசீரிடம் மேற்கே துறையிடத்துத் தாழ, கீழ்த் திசையிலும் வடதிசையிலும் போகாது. கடலாற் சூழப்பட்ட பூமிக்கு விளக்காக முழங்கா நின்ற தீப்பரக்கக் காற்றாற் பிதிர்ந்து கிளர்ந்து ஒரு விண்மீன் வானத்தில் விழுந்தது. அதனைப்பார்த்து யாமும் பிறரும் பலவேறு இரவலரும் எம் நல்ல மலைநாட்டுத் தலைவன் நோயிலனாயின் நன்று என்று அஞ்சி வருந்தினோம். அஞ்சியபடி ஏழாம் நாள் வந்ததாகலின் இன்று ... ... தேவருலகத்தை அடைந்தான் ...

இப்பாடலில் கூடலூர் கிழார் தம் காலத்து நிகழ்ந்த ஒரு விண்மீன் எரிந்து வீழ்தலைக் (Nova-Stellar Flare Up) குறித்திருக்கிறார். கி. பி 600 இல் வாழ்ந்த வராகமிகிரருக்கு முன்பே தமிழர் வானியலில் தேர்ந்திருந்தனர். வானத்தை மூன்று பெருப்பிரிவுகளாகப் பிரிதது (வீதிகள் — தெரு) அவற்றில் கதிரவனும், மதியும் நிற்கும் அடிப்படையில் வானியல் அமைத்திருந்தனர். இம்முறையானது இக்கால அறிவியல் முறைக்கும் ஏற்புடையதாதலைப் பின்வரும் விளக்கத்தால் அறிக:— [3]

வீதிகள்	இராசிகள்	மாதங்கள்	கதிரவன் நிலை
1—இடபம் (கிழக்கு)	1 கன்னி	1 புரட்டாசி	நிலநடுக்கோடு
	2 துலாம்	2 ஐப்பசி ->	
	3 மீனம்	3 பங்குனி	
	4 மேடம்	4 சித்திரை->	நிலநடுக்கோடு
2—மிதுனம் (தெற்கு)	5 விரிச்சுகம்	5 கார்த்திகை	மகரக்கோடு
	6 தனுசு	6 மார்கழி	
	7 மகரம்	7 தை	
	8 குப்பம்	8 மாசி	
3—மேடம் (வடக்கு)	9 இடபம்	9 வைகாசி	கடகக்கோடு
	10 மிதுனம்	10 ஆனி	
	11 கற்கடகம்	11 ஆடி	
	12 சிமமம்	12 ஆவணி	

மாந்தரஞ் சேரலின் இறப்பை அறிவித்த விண்மீன் எரிந்து வீழ்தலையே (Nova) அரேபிய வானியலார் ஏசுவின் பிறப்பை அறிவித்த விண்மீனாகவும், சீன ஹான் பரம்பரை வானியலார் Hui-hsing (துலடப்ப விண்மீன்) என்பதாகவும் குறித்துள்ளமையை இன்றைய ஆய்வாளர் வெளிப்படுத்தி இருக்கிறார்கள். அந்த ஏசுவின் பிறப்பை அறிவித்து அறிஞர்களை அவரிடம் கொண்டு சேர்த்த விண்மீன் பற்றி ஆய்ந்த பண்டாரகர். டேவிட் கிளார்க்கின் ஆய்வுச் சுருக்கம் வருமாறு. (இது நியூயார்க் பல்கலைக் கழக உரையாடலில் அவர் தெரிவித்தக் கருத்து) :-

13-ஆம் நூற்றாண்டில் ஏசுவின் பிறப்பை அறிவித்த விண்மீன் குரு—சனிக் கோள்களின் ஒருங்கிணைவு என்றே கருதப்பட்டது. 1285-ஆம் ஆண்டு ஒர்ஸ்டர் மடாலைய இதழ்களில் அவ்வாண்டைய குரு-சனிக்கோள்களின் ஒருங்கிணைவு பதியப்பெற்று இதுவரை இவ்வாறு நிகழ்ந்ததில்லை என்பதாகவும் குறித்தனர். ஆனால் ஜோகன்னஸ் கெப்ளர் என்பார் கி மு 7-இல் இவ்வாறு நிகழ்ந்தது என்று குறிப்பிட்டார். கடந்த ஆண்டு செப்பீல்ட் பல்கலைக்கழக இயற்பியல் துறைப் பேராசிரியர் பண் டேவிட் ஹெக்ஸ் கி. மு 7-இல் காணப்பட்டது மூன்று கோள்கள் ஒருங்கிணைவு என்பதாகச் சிலர் கூறியதை மறுத்து, இருகோள்களும் ஒன்றையொன்று முந்திச் சென்றதனையே இவ்வாறு கூறினர் என்று தெரிவித்தார். இக்கருத்தும் ஏற்புடையதன்று, பெத்தலகேம் விண்மீன் பற்றிய பைபிள் கருத்தை நோக்கும்போது. இருகோள்கள் இணைவு அத்தனை ஒளியுடன் விளங்கி இருக்க முடியாது; இருகோள்கள் ஒன்றென்னும்படி அவ்வளவு நெருக்கமாகக் காணப்பட்டிருக்காது; அவ்வாறாயின்

கோள்களின் இயக்கங்களை நுணுக்கமாக ஆராய்ந்து வந்த ஹான் பரம்பரையைச் சேர்ந்த சீன வானூலார் சோதிடக் கோட்பாட்டு நூல்களில் பதித்திருப்பர்.

'ஆனால் அவர்கள் கி மு. 7-ஆம் ஆண்டு வசந்தகால மாதங்களில் மகர இராசியில் ஒரு Hui-hsing தோன்றி, 70 நாட்கள் காணப்பட்டது என்றே குறித்துள்ளனர். Hui-hsing என்பதன் பொருள் துடைப்ப விண்மீன் அல்லது தூமம் என்பதாகும். தூமமாக இருந்தால் அது நகர்ந்து செல்லும் போக்கு, அதன் தன்மை ஆகியவற்றை அவர்கள் குறிப்பது வழக்கம் இந்த Hui-hsing பற்றி அவ்வாறு குறிக்கவில்லை. ஆகவே அது ஒரு நோவாவாக இருந்திருந்தால், புனித மத்தேயுவின் ஆகமத்துக்கு இணங்க அவர்கள் குறித்தபடி அக்காலத்து மகர இராசியில் கதிரவன் உதிக்க 4½ மணி நேரத்துக்கு முன்னால் பெத்தலகேமின் கிழக்கு வானில் தோன்றி இருக்கும் என்று உறுதியாகிறது. பொதுவாக ஏசு கி. மு. 5-ஆம் ஆண்டுக்கு முன்னால் பிறந்தார் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது.'

'கி. மு. 4-இல் இறந்ததாகக் கருதப்படும் ஏரோதுவின் ஆட்சிக் காலத்துப் பிறந்ததாக மத்தேயு, லூக்கா ஆகியோரின் ஆகமங்களில் கூறப்பட்டுள்ளது. தற்போது நாம் மேற்கொள்ளும் (ஆங்கில) நாட்காட்டியின் கால அமைப்பானது தொடக்கம் முதல் முனிவர் தயோனிசியஸ் எக்ஸிகுயியஸ் என்பாரால் கி. பி. 533-இல் நிறுவப்பட்டது. அவர் புதிய யுகத்துக்கு முன்னால் பின் நாட்களை (Back Dating) அமைக்கும் போது பேரரசர் அகஸ்தசின் ஆட்சிக் காலத்தின் நான்கு ஆண்டுகளை அலட்சியம் செய்துவிட்டார். (ஆகவே கி. மு. 7இல் ஏசு பிறந்திருக்கலாம் என்பது ஆய்வாளர் கருத்துப் போலும் — கட்டுரை ஆசிரியன்)

[பண்-டேவிட் கிளர்க்கின் கருத்துக்கள் இங்கிலாந்து நாட்டு இராயல் வானியல் கழகத்தின் முத்திங்கள் இதழில் 1977 திசம்பர் வெளியீட்டில் விளக்கப்பட்டுள்ளது. அவரது துணையாசிரியர்கள்
1 ஜான் பர்கின்சன், பல்கலைக்கழகக் கல்லூரி, இலண்டன்.
2. இரிச்சர்ட் ஸ்டீபென்சன், நியூகாஸில் பல்கலைக் கழகம்]

மேற்கண்ட ஆய்வில் விண்மீன் எரிந்து வீழ்ந்தது பொதுவாக கி. மு. 7இல் வசந்தகாலத்தில் என்றாலும் சீனக் குறிப்புகள் (வசந்தகால) ஏப்ரல் 7ஆம் தேதி என்று உறுதியாகக் கூறுகின்றன. இனி பண். கிளர்க்—கூடலூர் கிழார் ஆகியோரது கருத்துக்களை ஒப்பிட்டுக் காணலாம்.

(தொடரும்)